**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No. 58 of 2020 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 10 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | | |
|---|---|---|
| Name | : | Manjunathan |
| Father's Name | : | kesavan |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of January 2023.**

முதல்_விசாரணை :

நான் கிருஷ்ணகிரி டாஸ்மார்க் அலுவலக்தில் உதிவி மேளாலர் கணக்கர் பிரிவில் பணிபுரிந்து வருகிறோன். சம்பவம் சமயத்திலும் மேர்ச்சொன்ன உதவி மேலாளர் பணியிலோ பணியாற்றி வந்தேன். கடந்த 15.12.2018 அன்று கடை எண்.2936 வெப்பாளம்பட்டி கடையினை மூடிவிட்டு விற்பனையாளர் ஆனந்தன், முருகன் ஆகியோர்கள் இரவு 10 மணிக்கு அவர்கள் தங்கி உள்ள அறை அனுமன்தீர்த்தம் அருகே உள்ளதால் இருவரும் விற்பனை தொகையை கையில் எடுத்து கொண்டு வித்யாமந்தீர கல்லூரி விடுதிக்கு அருகே அவர்கள் சென்று கொண்டு இருந்தபோது அவர்களை பின் தொடர்ந்து வந்த இரண்டு நபர்களும் கையில் இருந்த துப்பாக்கியால் சுட்டு விற்பனையாளர்கள் கையில் இருந்த தொகையை பிடுங்கி சென்று விட்டதாகவும் சூப்பர்வைசர்கள் சுபாஷ் மற்றும் சிவகுமார் இருவரும் இரவு 11.30 மணில் அளவில் தொலைபேசி வாயிலாக தகவல் சொன்னர்கள். எனது உயர்அதிகாரியின் அவ்வாறு சம்பவம் அன்று இரவே தெரிவித்தார். விற்பனையாளர்கள் தாக்கப்பட்டு தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை இருப்பதாக கேள்விப்பட்டு மறுநாள் காலையில் மருத்துமனைக்கு வந்து பார்த்தேன். மருத்துவமனையில் விற்பனையாளர் முருகன் சிகிச்சையில் இருந்தார், மற்றொரு விற்பனையாரை மேல் சிகிச்சைக்காக சேலம் அனுப்பிவைந்தார்கள் என்று தெரிந்துக்கொண்டேன். எவ்வளவு தொகை களவு என்பதை அறிய மேற்படி கடைக்கு வந்தேன். எனது உயர் அதிகாரி மாவட்ட மேலாளர் கடையில் சென்று எவ்வளவு தொகை களவு சென்றது என்பதை உறுதி செய்து கூறுமாறி தெரிவித்து இருந்தார். மேற்படி கடையை பகல் 12 மணி அளவில் அடைந்து விட்டேன். கடையின் பூட்டு சாவி என்னிடம் இல்லை. அந்த இடத்தில் போலீஸ்சாறும் மேற் சொன்ன சுபாஷ், விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா அங்கு இருந்தார்கள். தொகையோடு சேர்த்து சாவியும் களவு செய்து விட்டதால் கல்லால் உடைத்து பூட்டை திறந்தோம். அதன் பிறகு சரக்கு இருப்பு விவரம், முந்தையநாள் வரை விற்பனை தொகை வங்கியில் வைப்பிடு செய்த விவரம், அங்கு இருந்த பதிவேடுகளின் மாவட்ட அலுவலத்தில் இருந்து, சரக்கு அனுப்பட்ட விவரத்தில் இருந்து விற்பனையான சரக்கு போக இருப்பில் உள்ள சரக்கின் அடிப்படையில் 15.12.2018 அன்று விற்பனை தொகை எவ்வளவு இருந்து இருந்து என கணக்கீடு செய்தேன். அதன் அடிப்படையில் 15.12.2018 அன்று ரூ.2,90,830/- தொகைக்கு சரக்கு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது. மேற்படி விவரங்கள் அடிப்படையில் புள்ளிவிவர பட்டியலை சுபாஷ் விற்பனையாளர்

கோவிந்தராஜ், இளையராஜா அகியோர்களுக்கு அங்கு இருந்ததால் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் வாங்கினேன். அப்போது அசோக்குமார் @ கோ நிறுவனத்தின் கணக்கர் உதவியாலர் ஆனந்தன் என்பவரும் புள்ளி விவரப்பட்டியல் விபரம் தயார் செய்து போது உடன் இருந்து கையொப்பம் இட்டார். அதன் ஒரு நகலை மேற்படி விற்பனையாளர், மேற்பார்வையாளர் ஆகியோர்களிடம் கொடுத்து விட்டு அசலை எனது உயர் அதிகாரி பார்வைக்கு நான் நேரில் சென்று கொடுத்தேன். இந்த வழக்கு சம்மதாமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1,2** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**</u>

மேற்படி கடையில் ஒரு மேற்பார்வையாளர் ஒரு கூடுதல் மேற்பார்வையாளர் மற்றும் நான்கு விற்பனையாளர்கள் பணிபுரிந்து வந்தனர். மேற்படி கடை திறந்து இரவு மூடும் வரை கடை முழுவதற்கும் மேற்சொன்ன 6 நபர்களோ பொறுப்பா என்றால் ஆமாம். மேற்படி மேற்பார்வையார்கள் தவிர 4 க்கு விற்பனையாளர்களும் பணி முடியும் வரை விற்பனையை முடித்து விட்டு செல்லவேண்டும் என்றால் சரிதான். 16.12.2018 அன்று விற்பனையாளர்களை நேரில் பார்த்தபோது முதல் நாள் கடையை மூடிவிட்டு 4-க்கு விற்பனையாளர்களும் ஒட்டு மொத்தமாக அறைக்கு சென்றார்களா என்று கேட்டேனா என்றால் எத்தனை நபர்கள் சென்றார்கள் என்ற விபரத்தை நான் கேட்கவில்லை, முதல் நாள்ளில் 2 நபர்கள் சென்றதாக தகவல் தெரியவந்தது. மாவட்ட மேளாளர் கொடுத்த தகவல்ளின் அடிப்படையில் சம்பவத்தன்று செய்யப்பட்ட விற்பனை தொகையை பற்றி புள்ளி விவரம் தயார் செய்தேன். புள்ளி விவரப்பட்டியல் தயார் செய்த என்னுடன் கணக்கர் உதவியார், ஒரு மேற்பார்வையார், இரண்டு விற்பனையாளர்கள் இருந்தனர். மேற்படி 4-க்கு நபர்கள் என்னுடன் இருந்தார்கள் என்ற விவரத்தை போலீஸ் விசாராணையில் கூறவில்லை என்றால் கூறவில்லை, போலீஸ்சார் உடன் இருந்தார்கள். புள்ளி விவரப்பட்டியல் தயார் செய்தபோது எத்தனை போலீஸ்சார்கள் இருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள். உடைக்கப்பட பூட்டை போலீஸ்சார் கைபற்றினார்களா என்றால் தெரியாது. கடையில் எவ்வளவு விற்பனையாகி உள்ளது என்பதை பில் பதிவேட்டை ஆய்வு செய்து உடனடியாக தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். கடையில் பில் பதிவேடு இல்லை என்பதால் கடையில் இருப்பில் உள்ள பாட்டில்களை ஆய்வு செய்து கணக்கு விவரம் தயார் செய்தேன் என்றால் சரிதான். கடையை பகல் 12.மணி அளவில் உடைத்து திறந்து பகல் 02.00 மணிக்குள் இருப்பினை சரிபார்த்து கணக்கு தயார் செய்தேன். மதியம் 2.00

மணிவரையில் போலீஸ்சார்கள் கடையிலேயே இருந்தார்கள் என்றால் கடைக்கு வெளியில் இருந்தார்கள். எனது மேல் அதிகாரியிடம் கணக்கை கொடுத்துவிட்டு சென்று விட்டேனா என்றால் ஆமாம். போலீஸ்சார் மதியம் 2.00 மணிக்கு பிறகு என்னை விசாரிக்க வில்லை. காவல் நிலையம் சென்று தொகை விவரத்தை போலீஸ் இடம் நான் கூறவில்லை என்றாலும் அறிக்கையும் கொடுக்க வில்லையென்றாலும் காவல் நிலையம் செல்லவில்லை என்னை விசாராணை செய்தபோது தொகையை கூறினேன். நான் கொடுத்த விவரத்தின் அடிப்படையில் கொள்ளை போனாதாக செல்லப்படும் தொகை அ.சா.1, 2 ஆகியோர்களுக்கு தெரியவந்தது என்றால் சரிதான். அ.சா. 1,2 இருவரும் புகாரின் கூறியுள்ள தொகையின் விரவம் தவறாது என்றால் அவர்கள் தோராயமாக கூறியிறுப்பார்கள். எனது அறிக்கையின் அடிப்படையில் தான் எவ்வளவு தொகை களவு செய்தது என்று கூறயிலலும் என்றால் சரிதான். போலீஸ்சார் விசாராணை செய்த போது என்னிடம் கையொப்பம் எதும் பெறவில்லை என்னை காவலர் விசாரணை செய்தார்கள் என்றால் அவர் பதவி விவரம் எனக்கு தெரியாது. கடையின் பூட்டை கோவிந்தராஜ் உடைத்தார். எனது அறிக்கையை போலீஸ்சாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

**(கற்றறிந்த 3-ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்படி கு.வி அம்சங்களை ஏற்றுக்கொள்வதாக தெரித்தார்).**

<u>மறுவிசாரணை:</u> இல்லை

SENTHIL KUMAR RAJAVEL

Sub

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL

Location: Uth